1990 ஏப்ரல் 20]

ஓமலூரில் முன்சீப் கோர்ட் அமைத்தல்.

*3779 திரு. கே. அர்ஜுனன் :

மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சேலம் மாவட்டம், ஓமலூரில் முன்சீப் கோர்ட் ஆரம்பிக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : சேலம் மாவட்டம் ஓமலூரில் முன்சீப் நீதிமன்றம் ஒன்றை அமைக்க உயர்நீதிமன்றம் பரிந்துரை செய்தது. இச்செயற் குறிப்பை 1990–91 ஆண்டிற்கான பகுதி 2 திட்டமாகப் பரிசீலிக்க முடிவு செய்யப்பட்டது. ஆனால் தொடர்ந்து நீடித்து வரும் நிதிநிலை நெருக்கடி காரணமாக 1990–91 ஆம் ஆண்டு பகுதி இரண்டு திட்டத்தில் இச்செயற் குறிப்பு சேர்க்கப்படவில்லை.

திரு. கே. அர்ஜுனன் : பேரவைத் தலைவர் அவர்களே, ஓமலூர் தாலுகாவானது சேலம் நகரத்தையொட்டி இருக்கிற பகுதி. சேலம் நகரத்தில் இருக்கிற செஷன்ஸ் கோர்ட் பகுதியைத் தாண்டித்தான் மேட்டூர் வரைக்கும் 30 கிலோ மீட்டர் தூரம் தாண்டிச் செல்ல வேண்டியிருப்பதால், இந்த ஆண்டு ஓமலூர் டிஸ்டிரிக்ட் முன்சீப் கோர்ட் வருமா என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : சேலம் மாவட்டத்தில் உரிமை இயல் நீதிமன்றங்கள் இருக்கிற இடங்கள்.

மாவட்ட முதன்மை உரிமை இயல் நீதிமன்றம், சேலம்.

கூடுதல் மாவட்ட நீதிமன்றம், சேலம்.

மாவட்ட முதன்மை உரிமை இயல் நீதிமன்றம், நாமக்கல்.

தற்காலிக கூடுதல் உரிமை இயல் நீதிமன்றம், நாமக்கல்.

மாவட்ட உரிமை இயல் நீதிமன்றம், மேட்டூர்.

மாவட்ட உரிமை இயல் நீதிமன்றம், திருச்செங்கோடு,

மாவட்ட உரிமை இயல் நீதிமன்றம், சங்ககிரி.

இவை தவிர, சேலத்தில் இரண்டு கோர்ட்டுகள் இருக்கின்றன இவைகளை மாற்றியமைக்க முடியுமா என்று பரிசீலித்து, உறுப்பினருடைய யோசனைகளையும் பரிசீலிக்கலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. அ. இராசேந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் உள்ள வட்டத் தலைமையகங்களிலே, மாவட்ட உரிமை இயல் நீதிமன்றங்கள் ஏற்படுத்த நிதிவசதி இல்லை என்றாலும், ஒரு சில வட்டத் தலைமையகங்களில் இரண்டு மாவட்ட உரிமை இயல் நீதிமன்றங்கள் இருக்கின்றன. கூடுதல், முதன்மை என்று இரண்டு இருக்கிறது. உதாரணமாக திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டத்தில், ஆரணி, திருவண்ணாமலை போன்ற இடங்களில் இரண்டு மாவட்ட உரிமை இயல் நீதிமன்றங்கள் இருக்கின்றன. அவைகளை முறையே, வந்தவாசி, செங்கம் போன்ற இடங்களுக்கு மாற்ற அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : அதைத்தான் நான் இப்போது திரு. அர்ஜுனன் அவர்களுக்குச் சொன்னேன். ஒரே மாவட்டத்தில் 2 நீதிமன்றங்கள் இருந்தால் அவைகளைப் பிரித்து ஒரு நீதிமன்றத்தை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதைப் போல ஆக்கலாமா என்று பரிசீலிக்க வேண்டும். உயர்நீதிமன்றத்தின் கருத்தைக் கேட்டு நடவடிக்கை எடுக்கலாம்.

பினாமி நிலங்கள்.

* 1617 திருமதி பாப்பா உமாநாத் :

மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருவரம்பூர் ஒன்றியம் சூரியூர் கிராமப் பகுதியில் நூற்றுக்கணக்கான ஏக்கர் நிலங்களைத் தனி நபர்கள் பினாமியாக கையகப்படுத்தியிருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) அந்நிலங்களை கைப்பற்றி அப்பகுதியிலே உள்ள நிலமற்ற ஏழைகளுக்குப் பிரித்துக் கொடுத்திட அரசுக்குத் திட்டமுண்டா?

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,